Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 08

வியாழக்கிழமை
04 டிசெம்பர் 2025

கார்த்திகை 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

## டித்வா பலி 479!

கொழும்பு, டிசெ. 4
டித்வா புயலால் இலங்கையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 479ஆக அதிகரித்துள்ளது என்று இடர் முகாமைத்துவ »15

# இடர் நிலைமைக்கு ஏற்ப பட்ஜெட்டை மாற்றுங்கள்!

### எதிர்க்கட்சிகள் கூட்டாக வலியுறுத்து





கொழும்பு, டிசெ. 4
டித்வா பேரழிவுகளுக்கு நிவாரணம் வழங்கும் வகைலும், மீட்புப் பணிகளைத் துரிதமாக்க ஏதுவாகவும் பட்ஜெட் மாற்றப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் ஓரணியில் வலியுறுத்தியுள்ளன. »15

## விமல் வீரவன்ஸவுக்கு பிடியாணை உத்தரவு!



கொழும்பு, டிசெ. 4
முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு எதிராகப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில், ஜனாதிபதியின் செயலகத்தால் விமலின் கட்சியான தேசிய சுதந்திர »15

## மருத்துவ உதவிகளையும் அனுப்பிவைத்த இந்தியா!

கொழும்பு, டிசெ. 4
டித்வா புயலால் பேரழிவுக்கு உட்பட்டுள்ள இலங்கைக்கு, இந்தியாவால் உணவுப் பொருள்களும், மீட்புக் குழுவினரும் அனுப்பப்பட்டிருந்த நிலையில் தற்போது மருத்துவ உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன.
அத்தியாவசிய மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவ »15

## வடக்கில் இன்று மீண்டும் மழை!

கொழும்பு, டிசெ. 4
வடக்கு மாகாணத்தில் இன்றுமுதல் மீண்டும் மழைக்குச் சாத்தியம் காணப்படுகின்றது என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் அந்தத் திணைக்களம் »15

## பேரிடர் தொடர்பில் ஆராய்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவாம்

### எதிர்க்கட்சி கோரிக்கை

கொழும்பு, டிசெ. 4
இலங்கையில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடர் தொடர்பில் ஆராய்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை அமைக்குமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.
பட்ஜெட் தொடர்பான விவாதங்களுக்காக நாடாளுமன்ற அமர்வுகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.
நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் நேற்று உரையாற்றினார். இதன் போதே, கால நிலை »15

## வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு 25,000 ரூபா நிதி

கொழும்பு, டிசெ. 4
வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாகப் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்கள் ஒவ்வொருவருக்கும், அவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக 25 ஆயிரம் ரூபாவை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. »15

## திஸ்ஸ விகாரையை உடன் அகற்றுங்கள்

### தையிட்டியில் நேற்றுப் போராட்டம் இன்றும் தொடரும் என அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 4
யாழ்ப்பாணம் தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்றிவிட்டு, அந்தக் காணியைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு வலியுறுத்தி காணிகளின் உரிமையாளர்கள் நேற்றுப் »15

## எரிவாயுத் தட்டுப்பாடு யாழில் இல்லை!

விரிவு பக்கம்:-03

### பல்கலைக்கழகங்களில்

## பீடாதிபதித் தெரிவை இடைநிறுத்த முடிவு!

கொழும்பு, டிசெ. 4
அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் மறு அறிவித்தல் வரை பீடாதிபதிகள் தெரிவுக்கான தேர்தல்களை நடத்துவதைப் பிற்போடுமாறு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.
நேற்று புதன் கிழமை இடம் »15



முச்சந்தி முராரி

'டித்வா புயலோட வந்த வெள்ளமே இன்னும் வத்தேலை அதுக்குள்ள மழையா?'

### திருநெல்வேலிப் படுகொலை

## சந்தேகநபர்கள் ஆறுபேருக்கும் விளக்கமறியல்

யாழ்ப்பாணம், டிசெ. 4
யாழ்ப்பாணம் – திருநெல்வேலியில் இளைஞரொருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதான ஆறு பேரையும், எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் »15

### பகிடிவதைக் குற்றச்சாட்டு

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு 10ஆம் திகதிவரை விளக்கமறியல்

யாழ்ப்பாணம், டிசெ. 4
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பகிடிவதையில் ஈடுபட்ட 19 மாணவர்களையும் எதிர்வரும் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ மற்றும் வணிகக் கற்கைகள் பீடத்தைச் சேர்ந்த 19 தென்னிலங்கை மாணவர்கள் கடந்த 21ஆம் திகதி »15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | விசேட எழுத்து |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 03.12.2025 | 4272 | K | 07 | 26 | 47 | 77 | K |
| | 03.12.2025 | 4273 | | | | | | |
| | 03.12.2025 | 4274 | K | 07 | 26 | 47 | 77 | K |

| ஹந்தஹன ராசி சுப பலன் | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 03.12.2025 | 1339 | மகரம் | 22 | 31 | 37 | 53 |
| | 03.12.2025 | 1340 | கும்பம் | 01 | 06 | 11 | 58 |
| | 03.12.2025 | 1341 | மகர | 04 | 12 | 18 | 62 |

| NLB ஜய | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 03.12.2025 | 0290 | S | 6 | 9 | 9 | 6 |
| | 03.12.2025 | | | | | | |
| | 03.12.2025 | | | | | | |

| மெகா பவர் | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கங்கள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 03.12.2025 | 2378 | I | 07 | 06 | 14 | 23 | 46 |
| | 03.12.2025 | 2379 | C | 01 | 16 | 17 | 56 | 75 |
| | 03.12.2025 | 2380 | G | 19 | 11 | 21 | 40 | 49 |

| மஹஜன சம்பத | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 03.12.2025 | 6030 | F | 7 | 4 | 7 | 6 | 1 | 2 |
| | 03.12.2025 | 6031 | E | 3 | 9 | 5 | 9 | 7 | 2 |
| | 03.12.2025 | 6032 | X | 2 | 7 | 1 | 2 | 2 | 9 |

| தன நிதானய | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | விசேட எழுத்து |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 03.12.2025 | 2060 | G | 18 | 46 | 54 | 57 | G |
| | 03.12.2025 | 2061 | G | 05 | 26 | 32 | 49 | G |
| | 03.12.2025 | 2062 | D | 49 | 53 | 70 | 79 | D |

| சுப தவசக் | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | 03.12.2025 | 0146 | கன்னி | 12 | 18 | 28 |
| | 03.12.2025 | 0147 | விருச்சிகம் | 04 | 19 | 60 |
| | 03.12.2025 | 0148 | மிதுனம் | 31 | 38 | 41 |

# அப்பிள் நிறுவனம் நிவாரணப் பணி

கொழும்பு,டிசெ.4

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கை உட்பட பல ஆசிய நாடுகளுக்கான நிவாரணப் பணிகளுக்கும், மீள்கட்டுமானப் பணிகளுக்கும் உதவிகளை வழங்க அப்பிள் நிறுவனம் முன்வந்துள்ளது.

தாய்லாந்து, இந்தோனேஷியா, மலேசியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமை காரணமாக அங்குள்ள மக்கள் தற்போது மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதற்கமைய அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட நாடுகளின் நிவாரண மற்றும் கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான பங்களிப்பை வழங்குவதற்கு அப்பிள் நிறுவனம் முன்வந்துள்ளது. (ச-இ)

# நாடாளுமன்றில் ஒரு நிமிட அஞ்சலி

கொழும்பு,டிசெ.4

அனர்த்தம் காரணமாக உயிரிழந்த அனைவரையும் நினைவுகூர்ந்து நாடாளுமன்றத்தில் நேற்று ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

எதிர்க்கட்சி உறுப்பினர் கயந்த கருணாதிலகவால் நாடாளுமன்றத்தில் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (ச-இ)

# யாழ். வீதிகள் கடும் சேதம்

யாழ்ப்பாணம்,டிசெ.4

கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளப்பாதிப்புகளால் யாழ்.மாவட்டத்தின் பிரதான வீதிகள் உட்பட உள்ளக வீதிகளும் கடும் சேதமடைந்துள்ளன.

யாழ். போதனா மருத்துவமனைச் சந்தி, கோப்பாய் சந்தி உள்ளிட்ட பிரதான வீதி களில் குழிகள் ஏற்பட்டுள்ளன. இதனால் வீதி விபத்துகள் ஏற்படுவதுடன், வாகனங்களின் போக்குவரத்தும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. (க-17)

| சுபிரி தன சம்பத | திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| | 03.12.2025 | புதன்கிழமை | V | 1 5 3 3 4 1 | 0740 |
| | 02.12.2025 | செவ்வாய்க்கிழமை | G | 5 3 9 8 6 5 | 0739 |

| Super Ball | திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|---|
| | 03.12.2025 | செவ்வாய்க்கிழமை | 3006 | J | 04 24 41 66 |
| | 02.12.2025 | செவ்வாய்க்கிழமை | 3005 | F | 21 38 46 55 |

| சனிதா | திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| | 03.12.2025 | புதன்கிழமை | D | 23 37 65 80 | 5167 |
| | 02.12.2025 | செவ்வாய்க்கிழமை | A | 12 53 65 70 | 5166 |

| SASIRI | திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| | 03.12.2025 | புதன்கிழமை | 0836 | 08 30 49 |
| | 02.12.2025 | செவ்வாய்க்கிழமை | 0835 | 03 16 19 |

| லக்ன ராசி | திகதி | தினம் | ராசி | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|---|
| | 03.12.2025 | புதன்கிழமை | கும்பம் | 06 10 24 52 | 4718 |
| | 02.12.2025 | செவ்வாய்க்கிழமை | மேஷம் | 07 43 53 61 | 4717 |

| KAPRUKA | திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|---|
| | 03.12.2025 | புதன்கிழமை | S | 38 | 17 35 42 62 | 2182 |
| | 02.12.2025 | செவ்வாய்க்கிழமை | U | 06 | 12 18 56 70 | 2181 |

| அத கோடிபதி | திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| | 03.12.2025 | புதன்கிழமை | X | 30 53 71 75 | 2832 |
| | 02.12.2025 | செவ்வாய்க்கிழமை | R | 02 18 44 47 | 2831 |

## 'டித்வா' புயலின் தாக்கம்

# 275,000 சிறுவர்கள் பாதிப்பு

கொழும்பு,டிசெ.4

'டித்வா' புயலின் பேரழிவால் இலங்கையில் பாதிக்கப்பட்ட 14 இலட்சம் பேரில், 2 இலட்சத்து 75 ஆயிரத்துக்கும் அதிகமான சிறுவர்கள் அடங்குகின்றனர் என்று ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி எம்மா பிரிகாம் கூறுகையில்,

தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்துத் தடைகள் காரணமாக உண்மையான பாதிப்பு எண்ணிக்கை இதைவிட அதிகமாக இருக்கலாம்.

சிறுவர்களுக்கு அவசரமாக உதவி தேவைப்படுகிறது. உயிர் காக்கும் சேவைகள் தேவைப்படும் மிகவும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களைச் சென்றடைவது ஒரு காலக்கெடுவுக்கு எதிரான போட்டியாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# பேரிடர் பாதித்த வடக்கு மக்களுக்கு உதவிகளை வழங்க இந்தியா தயார்

## துணைத்தூதுவர் சாய்முரளி தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், டிசெ.4**
**இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை மூன்று கட்டங்களாக வழங்க இந்திய அரசாங்கம் தயராக உள்ளது. வடக்கு மாகாண மக்களின் உடனடித் தேவைகளின் பட்டியலை வழங்கினால் உதவிகளை விரைந்து வழங்கமுடியும் என்று யாழ். இந்தியத் துணைத் தூதரக தூதுவர் சாய்முரளி தெரிவித்துள்ளார்.**



இந்தியத் துணைத் தூதரகத் தூதுவர் கொன்சியூலர் ஜெனரல் சாய்முரளிக்கும், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் இடையே நேற்றுப் புதன்கிழமை நடந்த சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
வடக்கு மாகாணத்தில் யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களும் கூடுதலான அழிவுகளையும், அதிக உட்கட்டுமான அழிவுகளையும் எதிர்கொண்டுள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநர் இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டினார். இறங்குதுறைகள், போக்குவரத்து வீதிகள், பாலங்கள், சிறிய மற்றும் நடுத்தரக் குளங்கள் எனப் பல்வேறு உட்கட்டுமாணங்கள் அழிவடைந்துள்ளமையைச் சுட்டிக்காட்டிய அவர், அவை தொடர்பான விவரங்களையும் முன்வைத்தார்.
இந்தியாவால் வழங்கப்பட்ட உதவிகள் தொடர்பாகவும், எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும்துணைத்தூதுவர்சாய்முரளி தெரிவித்துள்ளார். உலகளாவிய காலநிலை மாற்றத்தால் அடிக்கடி நிகழக்கூடிய இத்தகைய இடர்ப் பாதிப்புகளைத் தணிப்பதற்கான நிரந்தரக் கட்டமைப்பு இந்தியாவில் உருவாக்கப்பட்டுள்ளது போன்று இங்கும் உருவாக்குவதற்கான உதவிகளை எதிர்காலத்தில் வழங்கமுடியும் என்றும் அவர் உறுதியளித்தார். (எ-9-66)



## எரிவாயுத் தட்டுப்பாடு யாழில் இல்லை!

யாழ்ப்பாணம், டிசெ.4
யாழ்.மாவட்டத்துக்கு தொடர்ச்சியாக எரிவாயுச் சிலிண்டர்கள் எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.
யாழ்.மாவட்டத்துக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை 3 ஆயிரத்து 729 எரிவாயுச் சிலிண்டர்களும் நேற்றுப் புதன்கிழமை ஆயிரத்து 716 எரிவாயுச் சிலிண்டர்களும் எடுத்துவரப்பட்டுள்ளன. இன்று வியாழக்கிழமை 2 ஆயிரத்து 217 எரிவாயுச் சிலிண்டர்களும் எடுத்துவரப்படவுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-66)

## சுத்தமான குடிதண்ணீரே மன்னாருக்கு விநியோகம்

மன்னார்,டிசெ.4
மன்னார் மாவட்ட மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீரே விநியோகிக்கப்படுகின்றது. பாதுகாப்பான குழாய்க் கிணறுகளில் இருந்தே நீர் பெறப்படுகின்றது என்று மன்னார் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. டித்வா புயல் பாதிப்பால் ஏற்பட்ட வெள்ளத்தால், மக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிதண்ணீர் மாசுபட்டுள்ளது என்ற பொய்யான தகவல்கள் சமூக வலைத்தளங்களில் பரவிவருகின்றன. மக்களுக்கு விநியோகிக்கப்படும் குடிதண்ணீரை எமது ஆய்வகப்பிரிவு தொடர்ச்சியாகப் பரிசோதித்து வருகின்றது. நீர் குடிப்பதற்கு ஏற்றது என்பதை உறுதிப்படுத்திய பின்னரே மக்களுக்கு விநியோகிக்கின்றோம். எனவே பொதுமக்கள் அச்சப்படவேண்டாம். வதந்திகளை நம்பவேண்டாம் என்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. (க-56)



## 15,500 ஏக்கர் நெற்பயிர்கள் நாசம்

வடமத்திய மாகாணத்தில் பயிரிடப்பட்ட 15ஆயிரத்து 500 ஏக்கர் நெற்பயிர்கள் கனமழையால் முற்றிலுமாகச் சேதமடைந்துள்ளதாக த்தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 8,750 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த மக்காச் சோளச் செடி சேதமாகி உள்ளது. மேலும் 1,375 ஏக்கர் காய்கறிகளும் சேதமடைந்துள்ளன. கனமழை மற்றும் வெள்ளம் காரணமாக அறுவடைக்குத் தயாராக இருந்த மிளகாய்ச் செடியில் பூஞ்சை நோய்கள் மற்றும் கருகல் நோயால் சேதமடைந்துள்ளன என்றும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## மூடப்பட்ட தேசிய பூங்காக்களை மீளவும் திறப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, டிசெ.4
சீரற்ற வானிலை காரணமாக மூடப்பட்டிருந்த சில தேசிய பூங்காக்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
வில்பத்து தேசிய பூங்கா (ஹுனுவிலகம நுழைவாயில்), யால தேசிய பூங்காவின் முதலாவது பகுதி (பலட்டுபான நுழைவாயில்), மின்னேரியா தேசிய பூங்கா மற்றும் கவுடுல்ல தேசிய பூங்கா ஆகிய பூங்காக்களே மீண்டும் திறக்கப்படவுள்ளன. அத்துடன் குமண தேசிய பூங்கா தும்முல்ல மற்றும் கிரிகல்பே சுற்றுலா விடுதிகள், ஹோர்டன் சமவெளி தேசிய பூங்கா கினிஹிரிய மற்றும் மஹா எலிய சுற்றுலா விடுதிகள், வில்பத்து தேசிய பூங்கா மரதன்மடுவ வன விடுதி, மின்னேரியா தேசிய பூங்கா ரம்பவில சுற்றுலா விடுதி, யால தேசிய பூங்கா (பகுதி I) ஹீன்வெவ, ஒந்தாச்சி, பழைய புத்தாவ, புதிய புத்தாவ மற்றும் மஹாசீலாவ ஆகிய சுற்றுலா விடுதிகளைத் திறப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## எங்கட இடத்தில இப்பிடியொரு மியூசியமா?

'கல் தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்தகுடி நாங்கள்' என்டு எட்டுக்கட்டைக்கு அங்கால கேக்கிற மாதிரி மார்தட்டத்தான் எங்களுக்குத் தெரியுமே தவிர, உருப்படியா எங்கட வரலாறை ஆவணமா, ஆதாரங்களோட வைச்சிருக்கிற பழக்கம் துண்டறக் கிடையாது. நாங்கள் பாதுகாக்காட்டியும், எப்பிடியோ தப்பிப்பிழைச்சு மிச்சமாக் கிடக்கிற மரபுச்சின்னங்களைக்கூட எப்பிடி அழிக்கலாம் என்டுதான் பாக்கிறமே தவிர, இனியாவது அதுகளைப் பேணவேணும் என்ட அக்கறைக்கும் எங்களுக்கும் கனதூரம். இப்பிடிப்பட்ட அக்கறையீனப்புத்தியாலதான், சுற்றுலாப் பயணியள் அலைமோதிக்கொண்டிருக்க வேண்டிய மந்திரி மனையை ஏதோ பேய்வீடு மாதிரி , கவனிக்காமல் விட்டு மழைக்கு இடிஞ்சு விழுகிற அளவுக்குச் செய்து போட்டம். இதைமாதிரி எத்தினையோ மரபுச்சின்னங்களை நாங்கள் போய்ப் பாக்கிறதுமில்லை, வெளியில இருந்து வந்து பாக்கிறவைக்கு ஏற்றமாதிரி பேணிப்பாதுக்காக்கிறதுமில்லை. அதாலதான் றோட்டுவழியளில நூறு வயதைக் கடந்த சுமைதாங்கியள், ஆவுரஞ்சிக் கல்லுகள், மடங்கள் எல்லாம் அழிஞ்சு போய்க் கிடக்கு.

தமிழருக்கும் ஆவணப்படுத்தலுக்கும் எட்டாப் பொருத்தம் என்ட இந்த நினைப்பை, சிலர் தலைகீழா மாத்தி 'எங்களுக்கும் ஆவணப்படுத்தத் தெரியும்' என்டு எண்பிச்சும் இருக்கினம். அப்பிடியொரு ஆவணப்படுத்தலை, அதுவும் மருத்துவத்துறை சம்பந்தமா யாழ்ப்பாணத்தில செய்துகொண்டிருக்கினம் என்டது எங்களில எத்தினைபேருக்குத் தெரியும்? யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியிலதான் இந்த மெடிக்கல் மியூசியம் இருக்கு. இதுக்கெண்டு தனியா, சின்னதா ஒரு கட்டடத்தில அந்தக் காலத்தில இருந்து இந்தக்காலம் வரை மருத்துவத்தில பாவிச்ச கருவியள்,உபகரணங்கள் எல்லாம் தேடிப்பிடிச்சு எடுத்தந்து பக்குவமா பாக்க வைச்சிருக்கினம். அதோட யாழ்ப்பாணத்தில தொடங்கப்பட்ட முதலாவது மருத்துவக்கல்லூரி, அதைத் தொடங்கின டொக்டர் கிறீன், முதலாவது மருத்துவ மாணவர் அணி, யாழ்ப்பாணத்தில மருத்துவத்துறைக்குப் பங்களிப்புச் செய்த ஆக்களின்ர ஓவியங்கள், நூறு நூற்றைம்பது வருசத்துக்கு முந்தின மருத்துவப் புத்தகங்கள், அறிக்கையள் என்டு எந்தப் பக்கம் திரும்பினாலும் வாயைத் திறந்து பாக்க வைக்கிற மாதிரி வைச்சிருக்கினம். அதைவிட மருத்துவத்துறையில இப்பத்தை தொழினுட்ப வளர்ச்சி இல்லாத காலத்தில செய்த ஆச்சரியப்பட வைக்கிற சத்திரசிகிச்சையளை போட்டோக்களோட காட்சிப்படுத்தி விளக்குகினம். இந்த மியூசியத்துக்க போனா திரும்பி வரேக்க கிட்டத்தட்ட யாழ்ப்பாணத்தின்ர மட்டுமில்லை இலங்கையின்ர மருத்துவ வரலாற்றையே கரைச்சுக் குடிச்சிட்டு வரலாம். அதோட பள்ளிக்கூடப் பிள்ளையள் பாத்தினம் என்டால், 'நானும் டொக்டரா வரோணும்' என்ட ஆசை அவைக்கு இயல்பா வந்திடும்.

தனிய அங்க மருத்துவப்பொருள்களையும் போட்டோக்களையும், பேப்பர் கட்டிங்குகளை மாத்திரம் வைச்சிருக்கேலை. அங்க இருக்கிற ஒரு ஹோலில வெளிநாட்டில இருக்கிற பேமஸான தமிழ் டொக்டர்மாரோட, இஞ்சத்தை டொக்டர்மார் வீடியோ கோலில கதைச்சு, சிக்கலான மருத்துவப் பிரச்சினையளுக்குத் தீர்வு காணுற வசதியளும் இருக்கு. அதால வெளிநாட்டுக்குப் போய் லட்சக்கணக்கில காசைக்கொட்டி சிகிச்சை எடுக்கோணுமெண்ட கட்டாயமும் இல்லாமல் போகுது. அப்பிடி பெரிய பெரிய டொக்டர்மார் இங்கையுள்ள டொக்டர்மாரோட ஒவ்வொரு வருத்தம் பற்றியும் கதைச்சு விளங்கப்படுத்திற வீடியோ ரெக்கோட்டுகளும் அங்க வைச்சிருக்கினம். இந்த மியூசியம் பற்றியும், அதின்ர பெறுமதி பற்றியும் இஞ்சையுள்ளவைக்குத்தான் அதிகம் தெரியேலை. ஆனால் இந்த மியூசியத்தைப் பார்த்த சிங்கள டொக்டர்மார் 'எங்களிட்ட கூட இப்பிடி இல்லையே'என்டு ஆச்சரியப்பட்டு, தங்களிட்ட இருந்த பழைய மருத்துவ சாதனங்கள், படங்கள் எல்லாத்தையும் பேணிப்பாதுகாக்க கொண்டந்து குடுத்திருக்கினம். இப்பிடியொரு காலத்தால அழிக்கமுடியாத, கனதியான வேலையைச் செய்யிற பணிப்பாளர் டொக்டர் சத்தியமூர்த்திக்கும், மியூசியத்துக்கு மூளையா இருக்கிற துவாரகனுக்கும் தமிழாக்கள் என்ன கைமாறு செய்யப்போயினம்?

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன்–மனைவிக்கிடையே சிறு அளவில் கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். அதனால் மகிழ்ச்சியே ஏற்படும். நேரத்துக்குச் சாப்பிடமுடியாதபடி ஒன்று மாற்றி ஒன்று ஏதேனும் வேலை இருந்தபடியிருக்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும் போது வார்த்தைகளில் கவனமாக இருக்கவும்.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாகமுடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். தந்தைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கடகம்:** தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாகமுடியும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்குமேல் தொடங்கும் முயற்சி சாதகமாகமுடியும்.

**கன்னி:** மனதில் இனந்தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்பட்டாலும், அவர்களால் சில பிரச்சினைகளும் ஏற்படக்கூடும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். இளைய சகோதரவகையில் செலவுகள் ஏற்படும். முயற்சிகள் வெற்றிகரமாகமுடியும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். அவசியத் தேவை இருந்தால் மட்டுமே தக்க முன்னேற்பாடுகளுடன் வெளியில் செல்லவும்.

**கும்பம்:** கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் பிடிவாதப்போக்கு மாறும்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத்துணை நீங்கள் கேட்டதை வாங்கித் தருவார். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

# சைவத்தமிழ் மக்களால் கொண்டாடப்படும் திருக்கார்த்திகை தீப தரிசன வழிபாடு

மதுரகவி
காரை.எம்.பி.அருளானந்தன்



கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்தில் கொண் டாடப்படுவது திருக்கார்த்திகைத் தீபவிழா. கார்த்திகை நட்சத்திரத்துக்கு முன்னர் பரணியும் பின்னர் ரோகிணியும் வருவதுண்டு. கார்த்திகை மாதப் பூரணை சில காலத்தில் கார்த்திகை நட்சத்திரத்துடனும் சில வேளைகளில் பரணியோடும் சில சமயம் ரோகிணியுடனும் கூடிவரும். இவற்றுள் கார்த்திகையுடன்பௌர்ணமி சேர்ந்தால் அது பத்மயோகம் எனப்படும். ரோகிணி நட்சத்திரத்தோடு சேர்ந்து வந்தால் அது மகா கார்த்திகை என்றழைக்கப்படும் இந்தப் புண்ணிய நாள் திருக்கார்த்திகை விரதம்

### சர்வாலய தீபம்

கார்த்திகைத் தீபம் கார்த்திகை விளக்கீடு என்றெல்லாம் அழைக்கப்படும் திருக்கார்த்திகைத் தீப உற்சவம் வீடுகளிலும் எல்லா திருக்கோயில்களிலும் பெரும் விழாவாக நிகழும் சிவாலயங்களிலும் பெரும் விழாவாக நிகழும் சிவாலயங்களிலும் இல்லங்களிலும் நடைபெறும் தீபோற்சவ விழாவை சர்வாலய தீபம் என்று கூறுவர். திருக்கார்த்திகை விரத நாளில் முருகன் கோயில்களில் நடைபெறுவதைக் குமாராலய தீபம் என்றும் கூறுவர். திருமாலுக்கு தீபோற்சவ விழா எடுப்பதை விஷ்ணு வாலய தீபம் என்று அழைப்பர். இந்தக் கார்த்திகை உற்சவத்தைக் குறிக்கும் பொருட்டு தீபங்களைக் கொண்டு உயரமாகக் கொண்டிருக்கும் சொக்கப் பனை எரிப்பது வழக்கம் சொக்கப் பானை என்றோ சொர்க்கப் பானை என்றோ கூறுவது மரபல்ல.

### சுர்க்கப்பனை

சுர்க்கப்பனை என்று சொல்லும் மரபு திரிபு பெற்று சொக்கப் பானை என அழைக்கப்படுகிறது. சுட்கம் என்பது உலர்ந்த தென்னை, பனை, கமுகு, வாழை இவற்றின் தண்டைத் தீப தண்டமாகக் கோயில் சந்தி தானத்தில் நட்டு உயர்ந்த பனையோலை முதலியவற்றால் விமானம் போல உயரமாக மூடிக்கட்டி சுட்கம் பனையில் தீமூட்டி அது சுவாலித்து எரியும்போது சோதி சொரூபமாகவும், திருவண்ணாமலை தீபமாகவும் பாவனை செய்து பக்தர்கள் வழிபடுவர்.

### திருவண்ணாமலை

திருப்புகழ் என்ற அமுதத்தை எமக்கு வாரி வழங்கிய அருணகிரி நாதர் பிறந்து வளர்ந்த திருவண்ணாமலையில்தான். இந்த திருவண்ணாமலை மேலுள்ள தீப தரிசனக் காட்சியைப் பக்தர்கள் அண்ணாமலையானுக்கு அரோகரா என்ற அருள் முழக்கத்தோடு பல மைல்களுக்கு அப்பால் நின்று தரிசித்து பரவசமடைவார்கள்.

### சோதிய பிழம்பாய் நின்ற பெருமான்

திருமாலும், பிரம்மாவும் தமக்குள் யார் பெரியவர் என்று வாதிக்கத்தொடங்கினர். அவ் இருவர் மத்தியிலும் ஒரு பெரிய சோதி தோன்றியது அதனைக் கண்டு அவ்விருவரும் ஆச்சரியப்பட இந்தச் சோதி வடிவத்தின் அடியை யாவது முடியையாவது முதன்முதல் கண்டவரே பெரியவர் என்று அசரீதி எழுந்தது.

படைக்கும் தொழிலைச் செய்யும் பிரம்மா அன்னப்பட்சி வடிவமாகி மேலே பறந்து சென்றார். காத்தல் கடவுளாகிய விஷ்ணு பன்றி வடிவமெடுத்து பாதாளம் நோக்கிப் புறப்பட்டார். ஆனால் இருவருமே காண்பதற்குரிய சோதிப் பிழம்பாய் நின்ற பெருமானின் அடியையும் முடியையும் காணமுடியாது திகைத்தனர்.

### பொய்ச்சாட்சி

சிவன் முடியிலிருந்து விழுந்த தாழம் பூவையும் முருக்கம் பூவையும் பிரம்மா அழைத்து எம் பெருமானின் முடியைக் கண்டதாகத் தனக்காகப் பொய்ச்சாட்சி சொல்லும்படி செய்தார். இதை அறிந்த சிவன் சீற்றமுற்று பிரம்மாவுக்குக் கோயில்கட்டி வழிபடும் பேறு இல்லாமல் போகட்டும் என்றும் தாழம் பூவும், முருக்கம் பூவும் சிவ பூசைக்கு அருகதையற்றதாகவும் சபித்தார். விஷ்ணு உண்மை பகிர்ந்த படியால் அவரை வணங்க வாய்ப்பளித்தார். அதன்பின் எம்பெருமான் ஆணவ இருளை அகற்றி சிவலிங்க வடிமாகக் காட்சி நல்கிய நிலையே அருணாசலேசுரன் என்று அழைக்கப்படுகின்றார்.

### லிங்கோற்சவமூர்த்தி

இதுவே எல்லாச் சிவாலயங்களிலும் காணப்படும் லிங்கோற்சவ மூர்த்தி, தன்னிகரில்லாத் தனிப் பெருஞ்சுடராய் எம்பெருமான் நல்கிய திருக்காட்சியே திருக்கார்த்திகைத் தீப விழாவாக இந்து மக்களால் காலம் காலமாகக் கொண்டாடப்பட்டுவருகின்றது.

## குருதிக்கொடை



யாழ்ப்பாணம், டிசெ.4

டித்வா புயல் பேரிடர் நிவாரணத்துக்கான மனிதநேய முயற்சியாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இரத்ததான முகாம் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

ஜொலிஸ்டார் விளையாட்டுக்கழகம் மற்றும் கே.பி.ரி. கம்பஸ் இணைந்து நடத்தும் இரத்ததான முகாம் இன்று காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை யாழ்ப்பாணம் இந்து கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ச-100,66)

## திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம், டிசெ.4

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் மாதாந்தத் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு பௌர்ணமி நாளான இன்று வியாழக்கிழமை அதிகாலை முதல் முற்பகல் 11 மணி வரை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ச-66)

## பெருங்கதை

யாழ்ப்பாணம், டிசெ.4

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் பிள்ளையார் பெருங்கதை நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 21 நாள்கள் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

24 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கஜமுக சூரன் சங்காரம் இடம்பெறும் .

25 ஆம் திகதி வியாழக்கிழமை விநாயகர் சஷ்டி விரதபூஜை காலை 9 மணிக்கு இடம்பெற்று அன்றைய தினம் காலை 7 மணிக்குத் திருவெம்பாவை பூஜை ஆரம்பமாகும் . (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



## ஏழைத்தாயின் பாதையில்...!

இயேசு கிறிஸ்து தேவாலயத்தில் காணிக்கை செலுத்தும் இடத்துக்கு அருகாக உட்கார்ந்து மக்கள் செலுத்தும் காணிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். பொன், வெள்ளி, கால்நடைகள், ஆபரணங்கள், உயர்தர திராட்சை மதுக்கள், சிரிய நாட்டு மேலாடைகள், வாசனைத் திரவியங்கள் எனப் பல்வேறு பொருள்களை மக்கள் காணிக்கையாக்கினார்கள். ஏழையான விதவையும் தன் காணிக்கையைச் செலுத்தினாள். அவள் செலுத்திய காணிக்கை வெறும் இரண்டு காசுகள்தான். இயேசு, உடனடியாகத் தன் சீடர்களை அழைத்தார். ‘அந்த ஏழைப்பெண் செலுத்திய காணிக்கையே, இதுவரை செலுத்தப்பட்ட காணிக்கைகளுக்கு மேலானது’ என்றார். சீடர்களுக்கோ குழப்பம். சிரிய நாட்டு மேலாடைகள், திராட்சை மதுக்கள், பொன், வெள்ளி, வாசனைத்திரவியம் இவற்றுடன் ‘இரண்டு காசுகள்’ எவ்வாறு நிகர் நிற்கமுடியும்...? இயேசு தொடர்ந்தார். ‘இது வரை காணிக்கை செலுத்தியவர்கள், தங்களிடம் இருந்தவற்றில் ஒரு பகுதியையே ஒப்படைத்தனர். ஆனால், அந்தப் பெண் தன்னிடம் இருந்த அனைத்தையும் வழங்கிவிட்டாள்’ என்றார்.

காணிக்கை என்பது வழங்கப்படும் பொருள்களிலும், அவற்றின் பெறுமதிகளிலும் தங்கியுள்ள விடயமல்ல. மனம்தான் அனைத்துக்கும் பிரதானம். இலங்கையர்களாகிய நாங்கள் ஒவ்வொருவரும் இன்று ஆட்பட வேண்டிய மனோநிலையும் இதுவே. இரு தினங்களுக்கு முன்னர் சமூக வலைத்தளங்களில் ஓர் ஒளிப்படம் மிகவும் வைரலானது. இடைத்தங்கல் முகாம்களில் பராமரிக்கப்படும் உறவுகளுக்காக ஒரு ஏழைத்தாய் ‘இரண்டு கார்ட்பனடோல்களை’ அன்பளிப்புச் செய்திருந்தார். உண்மையில் அந்தத் தாயின் அன்பும் அன்பளிப்பும் பெரியவை - மற்றும் ஆத்மார்த்தமானவை. மீட்புத்திட்டங்களிலும், நிவாரணப் பணிகளிலும் பங்கெடுக்கக்கூடிய நிதி இயலுமை இருந்தும், அந்த விடயங்களைக் கருத்திற்கொள்ளாமல் செயற்படும் பல்லாயிரக்கணக்கானவர்கள் மத்தியில், மேற்படி ஏழைத்தாயின் அர்ப்பணிப்பு வார்த்தைகளால் அளந்து எழுதிவிட முடியாத அளவுக்கு பரிசுத்தமானது.

டித்வாவின் பேரழிவில் இருந்து நாட்டை மீண்டும் கட்டமைக்கும் பணிகள் தற்போது மும்முரமாக இடம்பெற்றுவருகின்றன. இந்தப் பணிகளில் நாங்கள் இரண்டு வகைகளில் பங்களிக்கமுடியும். ஒன்று, நன்கொடைகள். மற்றையது, தொண்டுப் பணியாளர்களாகக் களத்தில் இறங்குவது. நாட்டில் தேவைக்கும் அதிகமான இராணுவம் உள்ளது. எனவே, நாங்கள் பணியாளர்களாகக் களமிறங்கித்தான் நாட்டைத் தூக்கி நிறுத்தவேண்டும் என்பதல்ல. ஆனால், அரசாங்கத்தின் இடர் மீட்பு நிதியத்துக்கு நாங்கள் வழங்கும் சிறுதொகைகூட பெரும் அறுவடையைத் தரவல்லது. அத்துடன், பொருள்களாக, உடைகளாக, உணவுகளாக, மருந்துகளாக எங்கள் உறவுகளுக்கு நன்கொடை வழங்க நாம் ஒவ்வொருவரும் முன்வர வேண்டும். இந்தப் பேரழிவில் இருந்து நாட்டை மீட்பதற்கு எங்களின் உதவி ஏதோவொரு வகையில் இருந்தது என்பது எங்களின் வாழ்வு நெடுகிலும் வரவுள்ள ஆத்ம திருப்தி. ஆதலால், இதுவொரு வரலாற்றுக் கடமையும்கூட. இருப்பதைப் பகிர்வோம். இல்லாதோர்க்கு இரங்குவோம்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

வலிமையையும் உணர்ச்சியும் சாதிப்பதைவிட பொறுமையும் காலமும் அதிகமாக சாதித்து விடும்.

-லாபென்டெயின்-




## 156 நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் வெள்ளப் பேரிடரால் செயலிழப்பு

**கொழும்பு, நவ.4**

**நாடு முழுவதும் உள்ள 343 நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் 156க்கும் மேற்பட்டவை வெள்ளப் பேரிடரால் பகுதியளவில் அல்லது முழுமையான அளவில் சேதமடைந்துள்ளன என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவர் சந்தன பண்டார தெரிவித்துள்ளதாவது-

பாதிக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் 126 சுத்திகரிப்பு நிலையங்கள் தற்போது வழமைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. மேலும் 30 சுத்திகரிப்பு நிலையங்கள் சீர்செய்யப்பட்டு வருகின்றன. மீவத்துர சுத்திகரிப்பு நிலையத்தை இன்று (நேற்று) செயற்படுத்த எதிர்பார்க்கின்றோம். அது செயற்படுத்தப்பட்ட பின்னர் பிலிமத்தலாவ மற்றும் கெலி ஓயாவுக்கு நீர் வழங்க முடியும். கண்டி நீர் வழங்கல் செயல்முறை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், நகரின் எல்லைக்குள் பகுதி அளவில் மட்டுமே நீர் வழங்கப்படுகின்றது.

கண்டி மற்றும் பேராதனை மருத்துவமனைகளுக்கு முழுமையாக நீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கட்டுகஸ்தோட்டை நீர் சுத்திகரிப்பு நிலையத்தை மீண்டும் செயற்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள செயலிழந்த நீர் சுத்திகரிப்பு நிலையங்களை சீர்செய்வதன் மூலம் அடுத்த சில நாள்களில் நூறுவீதம் நீர் விநியோகத்தை வழங்கமுடியும் -என்றார். (எ-இ)



## குடிதண்ணீர்ப் போத்தல்களுக்கு தட்டுப்பாடு

கொழும்பு,டிசெ.4

நாடு முழுவதும் குடிதண்ணீர்ப் போத்தல்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சீரற்ற காலநிலை பாதிப்புகள் காரணமாக நாட்டில் குடிதண்ணீர்ப் போத்தல்களை நிரப்பும் பெரும்பாலான தொழிற்சாலைகளின் செயற்பாடுகள் முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளன. இலங்கையில் மல்வான, பியகம, யக்கல மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களில் உள்ள முக்கியமான உற்பத்தி மையங்கள் அனைத்தும் செயலிழந்துள்ளன. அவை மீண்டும் இயக்கப்படும்வரை, இந்தத் தட்டுப்பாட்டை சமாளிக்க வேண்டியிருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மின்கட்டண நிலுவைக்கு மின்துண்டிப்பு இல்லை!

கொழும்பு,டிசெ.4

இலங்கையில் நிலவிய இயற்கைப் பேரிடரையடுத்து மின்கட்டணம் செலுத்தப்படாமைக்காக இந்த மாதத்தில் எந்தவொரு மின்துண்டிப்பும் மின்சாரசபையினால் மேற்கொள்ளப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மானி வாசிப்புகள் மற்றும் மின்கட்டணப் பட்டியல்கள் விநியோகம் எதிர்வரும் மாதங்களில் மின்கட்டணம் சேர்க்கப்படும். அந்த கட்டணப்பட்டியல்கள் அடுத்த மாதங்களில் பாவனையாளர்களுக்குக் கிடைக்கச் செய்யப்படும். அதேவேளை மோசமான பேரிடர் காரணமாக இலங்கை மின்சாரசபையும் பெரும் இழப்பைச் சந்தித்துள்ளது. அது கணக்கிடப்பட்டு வருகின்றது என்றும் இலங்கை மின்சாரசபையின் பொது முகாமையாளர் ஷெர்லி குமார தெரிவித்துள்ளார். (ச-இ)

## வரலாறு காணாதளவு மரக்கறி விலை உச்சம்

டித்வா புயலால் பயிர்கள் அழிவடைந்ததைத் தொடர்ந்து மரக்கறிகளின் விலை எதிர்பாராதளவுக்கு உயர்ந்துள்ளன என்று சந்தை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பச்சை மிளகாய் கிலோ 3 ஆயிரம் ரூபாவுக்கும், கரட், லீக்ஸ் என்பன கிலோ 2,800 ரூபாவுக்கும் கத்தரிக்காய் கிலோ 800 ரூபாவுக்கும் விற்கப்படுகின்றன. (ச-இ)



## பாதுகாப்பான குடிதண்ணீருக்கு குளோரின் வழங்கிய ‘யுனிசெப்’

யாழ்ப்பாணம்,டிசெ.4

இயற்கை அனர்த்தங்களுக்கு இலங்கை முகங்கொடுத்துள்ள நிலையில் கிராமப்புற சமூகங்களுக்குப் பாதுகாப்பான குடிநீரை மீட்டெடுப்பதற்காக- நீர் சுத்திகரிப்புக்காக சுமார் 25,000 கிலோகிராம் குளோரினை யுனிசெப் வழங்கியுள்ளது. இது 500,000 குடும்பங்களுக்கு போதுமானது எனத் தெரிவிக்கப்படுகிறது. கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் சுத்தமான நீரை மீண்டும் பெறவும், நீர்வழி நோய்கள் பரவுவதைத் தடுக்கவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உட்கட்டமைப்பு சேதத்தால் பாதுகாப்பற்ற நீர் ஆதாரங்களுக்கு ஆளாகக் கூடிய கிராமப்புறங்களில் குளோரின் விநியோகிக்கப்படும் என கூறப்படுகின்றது. (ச-இ)

நாளை
வெள்ளிக்கிழமை – கார்த்திகை 19
05.12.2025
சுபநேரம் : 06.16 - 07.46
ராகுகாலம் : 10.46 - 12.16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.4
யாழ். மாவட்டத்தில் வெள்ளப்பாதிப்புகளின் பின்னர், தொற்றுநோய்களில் அபாயம் ஏற்பட வாய்ப்புகள் அதிகரித்துள்ளதால், மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் ஒலிபெருக்கிமூலம் மக்களுக்கு அறிவித்துவருகின்றனர்.

மாவட்டத்தில் பல்வேறு பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியதால் நீர் , நுளம்பு மற்றும் தோல் மூலம் தொற்றுநோய்கள் பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகரித்துள்ளன. எனவே பொதுமக்கள் தம்மைப் பாதுகாக்க சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். சுத்தமான நீரைப் பருகுதல், வெள்ளத்தை அகற்றி நுளம்பு பெருகுவதைத் தவிர்த்தல் உள்ளிட்ட பாதுபாப்பான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தொற்று நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறவேண்டும் என்று மக்களுக்கு அறிவுறுத்தி வருகின்றனர்.(சு-17)



# மெசிடோ நிறுவனத்தால் இடர் பாதிப்பு உதவிகள்!

யாழ்ப்பாணம்,டிசெ.4
இயற்கைப் பேரிடர் காரணமாக பாதிக்கப்பட்டு மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளியடி பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினால் (மெசிடோ) உதவிப்பொருள்கள் முதற்கட்டமாக வழங்கிவைக்கப்பட்டது.

அதன் தலைவர் ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழுவினர் கடந்த திங்கட்கிழமை குறித்த பாடசாலையில் தங்கியுள்ள மக்களை நேரடியாகச் சந்தித்து கலந்துரையாடியதோடு அவர்களுக்குத் தேவையான முதற்கட்ட நிவாரணப் பணியையும் முன்னெடுத்தனர். (ச-56)



கொடிகாமத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 225 குடும்பங்களுக்குச் சந்நிதியான் ஆச்சிரமத்தினரால் சமைத்த உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. ஆச்சிரம முதல்வர் செ.மோகன தாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று குறித்த உதவியை வழங்கி வைத்தார். (ச-66)



கைதடி குமரநகர் சனசமூக நிலையத்தினர் சாவகச்சேரி சக்தி அம்மன் தற்காலிக இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ள 75 குடும்பங்களைச் சேர்ந்த 250 பேருக்கு கடந்த திங்கட்கிழமை இரவுணவு வழங்கினர். (ச-419)


## வலி - கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச்சங்கம் வ-து

## பதவி வெற்றிடம்

எமது வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்படிவத்தை சங்க வேலை நாட்களில் தலைமைக்காரியாலயத்தில் ரூபா 10.00 இனைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் யாவும் "தலைவர் வலி-கிழக்கு வாழைக்குலை உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் நீர்வேலி" எனும் முகவரிக்கு 19.12.2025ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கவும்.

பதவிப் பெயர் :- பொது முகாமையாளர் (01)
சம்பள குறியீட்டு இல :- 101/08(கூஊழி ஆணைக்குழுவின் கூநி.இ02/2025(I)இன்படி)
சம்பள அளவுத்திட்டம் :- 35665-670X10-730X10-890X10-58565.
427980-8040X10-8760X10-10680X10-455460
(சுநி.இல: 02/2025 (I)இன்படி)

அங்கீகரிக்கப்பட்ட தகுதி

அ. கூட்டுறவு ஊழியர் 09ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை நிலை / மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02ஆண்டு கால அனுபவம் /
கூட்டுறவு ஊழியர் 10ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமைநிலை / மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04ஆண்டு கால அனுபவம்
அல்லது
ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டம்/அதற்குச் சமமான தகைமை இத் தகைமையானது கணக்கியல்/ வியாபாரப் புள்ளி விபரவியல்ஃவியாபார்க் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடங்கியிருத்தல் வேண்டும்./
இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல் முகாமைத்துவம்/ வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி.
அல்லது
இ. கூட்டுறவு ஊழியர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். /
கா.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம்/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமைநிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 05ஆண்டு கால அனுபவம்.

பதவிப் பெயர் :- கணக்காளர் (01)

சம்பள குறியீட்டு இல :- 104/09(கூ.ஊழி.ஆணைக்குழுவின்
சு.நி.இல02/2025(I)இன்படி)
சம்பள அளவுத்திட்டம் :- 35200-640X10-700X10-860X10-57200
422400-7680X10-8400X10-10320X10-448800
சு.நி.இல02/2025(I)இன்படி)

அங்கீகரிக்கப்பட்ட தகுதி :

அ. கூட்டுறவு ஊழியர் 10ஆவது சம்பளத் திட்டப்பதவியில் கணக்காளர்/உள்ளனக் கணக்காய்வாளர் /கணக்கு பதிவாளர் பதவியில் ஆகக்குறைந்தது 02ஆண்டு கால அனுபவம்/
கூட்டுறவு ஊழியர் 11வது சம்பளத்திட்ட பதவியில் உள்ளகக் கணக்காய்வாளர்/ கணக்கு பதிவாளர் கணக்கு / கணக்காய்வு எழுதுனர் பதவியில் ஆகக்குறைந்தது 04ஆண்டு கால அனுபவம்.
அல்லது
ஆ. இலங்கைத் தொழிநுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா / இதற்கு சமனான தகைமை/ மாகாண கூட்டுறவுப்பயிற்சி நிறுவனத்தினால்/ தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி
அல்லது
இ. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 03ஆண்டு கால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் / கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 03ஆண்டுகால அனுபவம்/ க.பொ.த உயர்தரப்பரீட்சையில் கணக்கியல் உட்பட 03பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வுத் துறையில் ஆகக்குறைந்தது 04ஆண்டு கால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு தொடர்பான பதவியொன்றில் 04ஆண்டு கால அனுபவம்.

பொதுவானது
அ. ஏனைய கூட்டுறவுச் சங்கங்களில் பணியாளர்கள் தமது விண்ணப்பங்களை அச்சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும்.
ஆ. வயதெல்லை 18 வயதிற்கும் 45வயதிற்கும் இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கப் பணியாளருக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

மேலதிக தொடர்புகளுக்கு : 0779232462/ 0767111168
தலைவர்,
வலி-கிழக்கு வாழைக்குலை,
உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கம்,
நீர்வேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைந்தும் மறவாமல் முதலாம் ஆண்டு நினைவில்



கடந்த 04.12.2024 அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

**அமரர் இராசலிங்கம் சரஸ்வதி**

**திதி: கார்த்திகை மாத வளர்பிறை சதுர்த்தி (24.11.2025)**

அன்பின் அன்னையே!
உம்முடன் இருந்த ஒவ்வொரு நொடியும்
நெஞ்சில் பதிந்த நினைவாகி விட்டது
உயிர் மறைந்தாலும், நினைவுகளாய்
நிலைத்திருக்கின்றன.

அன்பு மொழி பேசி
அறிவுரைகள் பல கூறி
ஆசையாய் எம்மை அரவணைத்து
இன்புற்று வாழ வழிகாட்டி நீரே அம்மா

உன் குரல் இன்னும் காதில் ஒலிக்குது
உன் வார்த்தை இன்னும் வழிகாட்டுது
வாழ்க்கை என்ற பாதையிலே - உம்
அன்புதான் என் நிழலாக இருக்குது

நீர் இல்லாமையால் வீடுவெறுமை
ஆனால் நினைவுகள் நிறைந்த ஒளிமை
இன்று எம்மைவிட்டு பிரிந்து
வருடம் ஒன்று ஆனதம்மா - இறைவன்
பாதம் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

புலவனார் வீதி, கல்வியங்காடு. குடும்பத்தினர்.

(CS 60082) A

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 02 . 1938

மறைவு 01 . 12 . 2025



**தில்லையம்பலம் நல்லம்மா**

யாழ் நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகவும் திருநகர் யோகபுரத்தை நிரந்தர வதிவிடமாகவும் அனிஞ்சியன் குளம் மல்லாவியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் நல்லம்மா அவர்கள் 01.12.2025 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - விசாலாட்சி தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற தில்லையம்பலம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுந்தரம்மா, குமாரசாமி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), கணபதிப்பிள்ளை, லட்சுமி மற்றும் வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பேரம்பலம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மற்றும் துரைசிங்கம், காலஞ்சென்றவர்களான சிவமணி, அருணாச்சலம் மற்றும் கமலாவதி, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், விக்னேஸ்வரன் (மோகன்), புவனேஸ்வரி (லலிதா - ஓய்வு பெற்ற ஆசிரியர் - மு/யோகபுரம் மகா வித்தியாலயம்), சதானந்தம் (சந்திரன்), தயானந்தம் (தயா - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பிறேமலா, யோகானந்தராசா (ஓய்வு பெற்ற கோட்டக் கல்வி அதிகாரி), தோகைநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியர் - கிளி/சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம்), கலாநிதி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிரதீபன் (தர்சன்), உஷாளினி, பிரதீப், பிரபாளினி, தேனுஜா, கஜனுஜா, கானுஜா, அகவளவன், அகவதனன், அகப்பிரியன், அர்ச்சிகன், அக்சயன், துசாந்தினி, நிருயன், சிவரஞ்சன், நிதுசன் ஆகியோரின் பேர்த்தியும், அகானா, அஸ்வின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2025) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநகர் பாலியாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தொடர்புகளுக்கு:**

| | |
|---|---|
| விக்கினேஸ்வரன் | : 077 654 3616 |
| சதானந்தம் (சந்திரன்) | : 077 200 4384 |
| யோகானந்தராசா (யோகன்) | : 077 789 3799 |
| தயானந்தம் (தயா) | : +336 5237 7697 |

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 60076) E

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை
## படவரைஞர்களைப் பதிவு செய்தல் - 2026

வலிகாமம் வடக்கு பிரதேசசபை எல்லைக்குள் படவரைஞர் சேவையை மேற்கொள்ள 2026ம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. புதிதாக பதிவு செய்வதற்கு ஆர்வம் உடையவர்கள், ஏற்கனவே எமது சபையில் பதிவுசெய்துள்ளவர்களும் தமது பதிவு அல்லது புதுப்பித்தலினை எதிர்வரும் 31.12.2025ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**கல்வித்தகைமை:**

- NVQ – 5 Drafting Technology (Buildings) கற்கைநெறியினை பூர்த்திசெய்துள்ளவர்கள் உரிய சான்றிதழை சமர்ப்பித்து படவரைஞராக பதிவினை மேற்கொள்ளலாம். மற்றும் ஏற்கனவே 2025 ஆம் ஆண்டுக்கான படவரைஞராக பதிவினை மேற்கொண்டவர்கள் NVQ – 5 Drafting Technology (Buildings) கற்கைநெறியினை தொடர்வதனை உறுதிப்படுத்தும் ஆவணத்தினை சமர்ப்பித்து பதிவுகளைப் புதுப்பித்தல் கட்டாயமானதாகும்.

**குறிப்பு:** பதிவுகளை மேற்கொள்ளாத படவரைஞர்கள் 2026ம் ஆண்டிற்கான படவரைஞராக வலிகாமம் வடக்கு பிரதேசசபையில் செயற்படமுடியாது என்பதை தெரிவித்து கொள்கின்றேன்.

**கட்டண விபரம்**

- படவரைஞராக பதிவுசெய்வதற்கான உரிமக் கட்டணம் ரூபா. 1000.00
- படவரைஞராக பதிவு செய்தல் கட்டணம் ரூபா. 5000.00
- புதுப்பித்தல் கட்டணம் ரூபா. 2000.00

சோ.சுகிர்தன்
தவிசாளர்
வலிகாமம் வடக்கு பிரதேசசபை

## Nadiya`s
Textile (pvt) Ltd

**யாழ்பாணத்தில் புதிதாகத் திறக்கவுள்ள காட்சியறைக்கு உடனடி வேலை ஆட்கள் தேவை!**

### வேலை வெற்றிடங்கள்

01. விற்பனை உதவியாளர்கள்
02. காசாளர்கள்
03. மேற்பார்வையாளர்கள்



உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்

60,000/= க்கும் மேற்பட்ட சம்பளம் வழங்கப்படும்

### திறந்த நேர்முகத்தேர்வு

**திகதி : DECEMBER 06TH & 07TH**

**இடம் : யாழ்ப்பாண போதன வைத்தியசாலை 02ம் இலக்க நுழைவாயிலுக்கு எதிரே உள்ள கட்டிடத்தில்**

**CONTACT: 076 136 7475 | 077 998 0885**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
24 . 12 . 1990

மறைவு
27 . 11 . 2023

### அமரர் இராமகிருஷ்ணன் றதீசன்

காற்றோடு கலந்த சுவாசம் .....
கண்ணீராய் வடிந்த பாசம் .....
உலகினை கடந்து போனாலும் .....
உறவுகளை கடந்து போனாலும் .....
ஓர் நல்ல மனிதனை .....
உங்களோடு .....
பயணித்தவர்களை மறந்து போவார்களா .....
உன்னதமான உயிருக்கு இதய அஞ்சலி

கோப்பாய் வடக்கு
கோப்பாய்

பிரிவால் துயருறும்
தந்தை மற்றும் உடன் பிறவா
சகோதரர்கள்

(CS 60077) E

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
03 . 01 . 1940



மறைவு
15 . 12 . 2024

### அமரர் திரு. இராமன் கந்தசாமி

திதி : பூரணை

ஆண்டு ஒன்று ஆனதப்பா இருந்தும் உன்
பிரிவால் நம் மனமோ இன்னும் ஆறவில்லை அப்பா.....
பண்பாய் பவனியில் எம்மை வளர்த்து விட்டு
நீ மட்டும் தனியாய் விண் உலகு சென்றாயோ.....
உன்னோடு உடன் வாழ்ந்த காலமது பொற்காலம் அப்பா......
நம் காவிய கதை கூறும் கதா நாயகன் நீ அப்பா......
மண்ணகம் போற்றும் தெய்வமும் நீ அப்பா.....
என்றென்றும் உன் புகழ் தன்னை வையகம் போற்றிடும் அப்பா......
நிகர் இல்லா அன்பாளன் நீ அப்பா.....
ஆண்டு ஒன்று கடந்த போதும் உன்
நினைவோ நீங்காது நாம் வாழ்கிறோம் அப்பா......

மகன் சிவா
குடும்பத்தினர்

(CS/60073) J-1

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் குணரெட்ணம் ராஜ்குமார் (ரமணன்)

திதி : சதுர்த்தசி



தோற்றம்
01.09.1981

மறைவு
06.12.2022

ஆண்டுகள் மூன்று சென்றாலும் உனதாளுமை நடைபோடுகின்றது
மீண்டு நீவீர் வரமாட்டீரோவென்று விம்மித்தவிக்கின்றது நெஞ்சு
தூண்டும் எண்ணங்கள் எம்முள் சுடர் விட்டுத்துடிக்கின்றது
தோண்டும் உள்ளன்பு மனதை தொட்டவண்ணமிருக்கின்றது.

ஈச்சமோட்டையில் இன்புற்று பண்புற்று செழித்த காலங்கள்
பேச்சு அடங்கி பேரானந்தம் கருகி வாடிய கோலங்கள்
ஏச்சுக்கேட்காமல் எல்லாம் புரிந்து புகழ் பெற்றுய்த நேரங்கள்
போச்சு யாவுமென்று இருக்கின்றோம் புண்ணியனே உமையிழந்த நொடிகள்

நான்கு தசாப்தங்கள் நானிலத்தில் நயப்புடன் நறுஞ்சுவை வாழ்வு
ஓங்குபுகழ் ஒலித்த உசாருடல் உயிரோடு இணைந்த உயர்வு
தாங்குதிறன் எமக்களிக்காது தவிர்த்து தரணிவிடுத்ததோ நாம்பெற்ற தாழ்வு
வீங்கு நெஞ்சு விம்முகின்றது தூங்கவிடாது துடிக்க வைக்கின்றது

45/7 , 2ம் ஒழுங்கை
ஈச்சமோட்டை வீதி
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

(CS/60080) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ். வணிகர் கழகத்தினூடாக மன்னார், கிளிநொச்சிக்கு நிவாரணம்!

டித்வா புயலால் நாட்டில் ஏற்பட்ட கடும் மழை மற்றும் வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிப்பொருள்களை யாழ்ப்பாணம் வணிகர் கழகம் வழங்கியுள்ளது.

கிளிநொச்சி, மன்னார் மாவட்ட மக்களுக்கு வழங்குவதற்காக 15 இலட்சம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொருள்கள் அந்தந்த மாவட்ட செயலர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

யாழ். வர்த்தகர்களின் நிதிப் பங்களிப்போடு யாழ். வணிகர் கழகம் ஊடாக குறித்த மனிதாபிமானப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பிள்ளையார் கதை

யாழ்ப்பாணம்,டிசெ.4

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் பிள்ளையார் கதை விரதம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு சிறப்பு அபிசேகத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 21 நாள்கள் பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

✦✦✦✦

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் பிள்ளையார் கதை விரதம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு சிறப்பு அபிஷேகத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து பிள்ளையார் கதை படிப்பு மற்றும் வில்வ அர்ச்சனை என்பன இடம்பெறும்.

✦✦✦✦✦

வண்ணை சாந்தையர் மடம் கற்பக விநாயகர் ஆலயத்தில் விநாயகர் விரதம் நாளை வெள்ளிக்கிழமை சிறப்பு அபிசேகத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 21 நாள்கள் பூசை வழிபாடுகள் இடம்பெறும். (க-17)

# காசி ஆனந்தனின் 'காளி' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ.4

உணர்ச்சிப் பாவலர் காசி ஆனந்தன் எழுதிய 'காளி' நூல் வெளியீட்டு விழா நாளைமறுதினம் சனிக்கிழமை தமிழ்நாடு தஞ்சாவூரில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் எதிர்வரும் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பழ. நெடுமாறன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் திரைப்பட இயக்குநர் புகழேந்தி தங்கராசு நூல் வெளியீட்டு உரையை நிகழ்த்தவுள்ளார். (ச-100)


# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் அற்புதஜெயம்

(ஓய்வு பெற்ற கிராம சேவையாளர்)



பிறப்பு 09.08.1952 — இறப்பு 02.12.2025

மீசாலை வடக்கு இராமாவிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் - நல்லம்மா ஆகியோரின் சிரேஷ்ட புத்திரன் அற்புதஜெயம் (இராசா) 02.12.2025 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அற்புதராசா (கனடா), லோகேந்திரன் (ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்), ரவீந்திரன் (பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன ஊழியர்), பாலேந்திரன் (ஜேர்மனி), நிமலேந்திரன், விஜயமாலா, அகிலா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஈஸ்வரி (கனடா), தேவகலை (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சுகந்தி, கௌசி (ஜேர்மனி), சிவநேசசுந்தரம் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், அகல்யா, அனியா (கனடா), நிஷாந்தன் (லண்டன்), விஷாகன் (பொறியியலாளர்), ரஜீபன் (தபால் ஊழியர்), நிஷாந்தி, லர்சனன் (மென்பொருள் பொறியியலாளர்), சுகர்னன், நிருஷன், நிஷானி (ஜேர்மனி) ஆகியோரின் பெரிய தந்தையும், சஜிதன், பவிதன், அபிலாஷ் (லண்டன்) கீர்த்திகா (கண்டாவளை பிரதேச செயலக தகவல் தொழிநுட்ப உத்தியோகத்தர்), ஜெயந்தி ஆகியோரின் மாமனாரும், தனிக்சிகா, தனிக்சிகன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.12.2025) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று காலை 11 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு கொண்டு செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு 077 977 1942

தகவல்: குடும்பத்தினர்

(CS 60072) E


## Democratic Socialist Republic of Sri Lanka
## Nallur Pradeshiya Sabha, Kokuvil.
## Northern Province
## Bidding Documents for Procurement of Sewing Machine

01.The Chairman, Divisional Procurement Committee on behalf of the Nallur Pradeshiya Sabha, Kokuvil, Northern Province, invites sealed bids from eligible and qualified bidders for the Procurement of Sewing Machine and Supplying as in table below and all bids must be accompanied by a bid security and the validity periods of bid security are given in table below.

| No | Bid No | Description of Goods | Employer's Estimated Cost (Rs. Mn) | Contract Period (Days) | Bid Validity Period | Bid Security Amount (Rs) | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | NP/14/41(10)/ 03/ACC/Sewing machine/A/2025 | **Procurement of Power Saving Lockstitch Machine** | 2.5 | 30 days | 18.12.2025 | 50,000.00 | 19.02.2026 |
| 02 | NP/14/41(10)/ 03/ACC/Sewing machine/B/2025 | **Procurement of 2 Needle 5 Thread Overlock machine** | 01 | 30 days | 18.12.2025 | 10,000.00 | 19.02.2026 |
| 03 | NP/14/41(10)/ 03/ACC/Sewing machine/C/2025 | **Procurement of Sewing Machine-Feed Drop Mechanism** | 1.2 | 30 days | 18.12.2025 | 24,000.00 | 19.02.2026 |

1. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
2. Interested eligible bidders may obtain further information on public working days between 09:00 hrs and 15:00 hrs from 04th December 2025 to 17th December 2025 from Chairman, Nallur Pradeshiya Sabha, Kokuvil and inspect the bidding documents at the same place on the above time.
   TP: -021 2222700, Email npsnallur@gmail.com
3. Qualification requirements are include possessing the minimum 3 years' experience in selling and having Island wide maintenance in the particular brand and field. Additional details are provided in the bidding document.
4. A complete set of Bidding Document is English language may be purchased by interested bidders on submission of a written application to the address Chairman, Nallur Pradeshiya Sabha-Kokuvil from 04th December 2025 to 17th December 2025 from 09.00 hrs to 15.30 hrs on public working days and upon payment of non-refundable fee of Rs 2,000.00 (Including all Taxes). The method of payment should be by cash.
5. Complete Bids must be delivered to the address below in two copies as original and the duplicate. The original and duplicate should be enclosed separately and mark "Original" and "Duplicate" respectively in sealed envelopes. Both envelopes should be marked the "Bid number" on top left-hand corner of the envelop. Complete Bids should be delivered to Chairman, Divisional Procurement Committee, Nallur Pradeshiya Sabha, Kokuvil on or before 18th December 2025 at 11.00 hrs. Electronic bidding will not be permitted. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders or their representatives who choose to attend in person.
6. The Pre-Bid Meeting will be held at Nallur Pradeshiya Sabha-Kokuvil on 12th December 2025 at 14.00 hrs, Interested Bidders May Participate in this Meeting their own expenses.
7. The Bid shall be valid up to 63 days after the deadline for Bid Submission. All bids shall be accompanied by Bid Security as stated in the Table above

Chairman,
Divisional Procurement Committee,
Nallur Pradeshiya Sabha, Kokuvil.

04.12.2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை ம.சண்முகலிங்கத்தின் ஆவணப்படத் திரையிடலும் கருத்துப்பகிர்வுகளும்

யாழ்ப்பாணம், டிசெ.4



குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நினைவுக் கருத்துப் பகிர்வுகளும் சோமிதரன் இயக்கத்தில் உருவான குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'அரங்கம்' ஆவணத் திரைப்படம் திரையிடலும் யாழ். .பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இன்று வியாழக்கிழமை பி.ப.3 மணிக்கு நடைபெறவுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறை, ஊடகக் கற்கைகள்துறை, கலைப்பீடம் ஆகியவை இணைந்து நடத்தும் இந்த குழந்தை ம.சண்முகலிங்கம் நாள் நிகழ்வுகள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் வாழ்த்துரையை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, சிறப்புரையை கலாநிதி க.சிதம்பரநாதன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

